## ★ உலக நாடுகளில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

★ விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 32 இதழ் 126
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 16 - 7 - 1995

[லண்டன்]

யாழ், குடாநாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக அரச படைகள் நடாத்தும் படுகொலைகளைக் கண்டித்து அவுஸ்திரேலியா, நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளில் மாபெரும் கண்டனப் பேரணிகள் நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்றுள்ளன.

இந்த நாடுகளின் தலைநகர்களில் நடந்த கண்டனப் பேரணிகளில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொண்டனர்.

தமிழர் மீதான படுகொலைகளைக் கண்டித்து சிறிலங்கா அரசுக்கு எதிராக இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து

(5ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் பிரதமரிடம் தமிழர்கள் மகஜர்

(லண்டன்)

இலங்கை அரசு, யாழ்ப்பாணம் மீது நடாத்தி வரும் விமானக் குண்டு வீச்சையும். கடும் ஷெல் தாக்குதல்களையும் உடன் நிறுத்துமாறு கோரி சர்வதேச தமிழ் சம்மேளனம் பிரிட்டிஷ் பிரதமரின் தலைமைச் செயலகத்துக்கு முன்னால் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினார்கள்.

பிரிட்டனில உள்ள நூறு தமிழ் அமைப்புகள் ஒன்று சேர்ந்து இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடாததியுள்ளன.

யாழ். குடா நாட்டில் தேவாலயங்கள், கோவில்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் மீது இலங்கை இராணுவம் நடாத்திவரும் கண்

(6ம பக்கம் பார்க்க)

## ★ 'ஒப்பரேஷன் புலிப் பாய்ச்சலால்'

# பல இடங்களிலிருந்து ராணுவம் பின்வாங்கிச் சென்றுவிட்டது!

## வட்டு, சங்கானை, சண்டிலிப்பாய், அராலியில் படைகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

தேசியத் தலைவரால் பெயரிடப்பட்டு வலி-வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடாத்திய "ஒப்பரேஷன் புலிப் பாய்ச்சல்" தாக்குதலையடுத்து வலி-வடக்கு, வலி-மேற்கில் வட்டுக்கோட்டை, சங்கானை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, தொட்டிலடி, சிரணிச்சந்தி, அராலி ஆகிய பகுதிகளிலிருந்து நேற்று மாலை படையினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

புலிகளின் இந்த 'புலிப் பாய்ச்சல்' நடவடிக்கையில் படையினருக்கு ஏற்பட்ட மிகப் பெரும் இழப்பே படையினர் இவ்வாறு தாம் கைப்பற்றிய இடங்களிலிருந்து பின்வாங்கிச் செல்லக் காரணமாய் அமைந்துள்ளது.

பெருமெடுப்பில் பல்லாயிரக் கணக்கான தொகையில் படையினர் மேற்கொண்ட 'ஒப்பரேஷன் லீப் போவேட்டை' புலிகளின் 'ஒப்பரேஷன்புலிப் பாய்ச்சல் பெருமள

(6-ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மீது அரசு பலத்த கண்டனம்

(கொழும்பு)

நவாலியில் சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது 'புக்காரா' விமானம் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஜெனிவாவில் அறிக்கை வெளியிட்டமைக்கு இலங்கை அரசு பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

## படையினர் வெளியேறிய பகுதிக்கு உடன் செல்ல வேண்டாம்

[யாழ்ப்பாணம்]

இராணுவம் தற்போது பின்வாங்கிச் சென்ற பகுதிகளுக்குள் பொதுமக்களை உடனடியாகச் செல்ல வேண்டாமென்று விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

இராணுவம் முதலில் முன்னேறிய பகுதிகளிலிருந்து தற்போது பின்வாங்கிச் செல்வதினால் இப்பகுதிகளில் பெருமளவில் கண்ணிவெடிகளையும், மிதிவெடிகளையும் புதைத்துவிட்டுச் சென்றிருப்பது விடுத

(6ம் பக்கம் பார்க்க)

## புலிகளை இலகுவில் தோற்கடிக்க முடியாது

(கொழும்பு)

கடற்புலிகள், வான்புலிகள் போன்ற பல யுத்தக் கட்டமைப்புகளை கொண்ட விடுதலைப் புலிகளை இலகுவில் தோற்கடிக்க முடியாது என்று அரசியல் அவதானிகள் கருதுவதாக பி. பி. சி. சிங்கள சேவை தெரிவித்தது.

(6ம் பக்கம் பாக்க)

## யாழ். குடாத் தாக்குதலிற்கு இந்தியா பின்னணியில் நிற்கிறது

### வை. கோபாலசாமி குற்றச்சாட்டு

(லண்டன்)

யாழ்ப்பாணம்மீது இலங்கை இராணுவம் தற்போது மேற்கொள்ளும் தாக்குதலின் பின்னணியில் இந்திய அரசு இருப்பதாக சந்தேகப்படுகிறோம். இந்த சந்தேகத்தை நாம் வெளிப்படையாகவே சுட்டிக் காட்டியிருக்கிறோம் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. வை. கோபாலசாமி பி. பி. ஸிக்கு வழங்கியபேட்டியில் தெரிவித்துள்ளார்.

(6ம்பக்கம் பார்க்க)

## குண்டுவீச்சை கண்டிக்க அமெரிக்கா மறுப்பு

(வாஷிங்டன்)

நவாலி தேவாலயம்மீது 'புக்காரா' குண்டு வீசி நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தினை கண்டிக்க அமெரிக்க அரசு மறுத்துவிட்டது.

இலங்கையில் வடக்கில் அரசபடைகள் மேற்கொண்டு வரும் தாக்குதல் குறித்து அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் திரு. நிக்கலஸ் பேர்ன் அறிக்கை

(5-ம் பக்கம் பார்க்க)

## மேலதிக படையினர் அவசரமாக யாழ். குடாவிற்கு விரைவு

[கொழும்பு]

யாழ். குடாவிற்கு மேலதிக படையினர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நேற்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலை சமாளிக்கவே இந்த மேலதிகப் படையினர் யாழ். குடாவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சண்டிலிப்பாய், அளவெட்டிப் பகுதியில்

(6ம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரிகள் பலர் படுகாயம்

[கொழும்பு]

நேற்று முன்தினம் வலிகாமம் மேற்குப் பகுதியில் விடுதலைப் புலிகள் பெருமெடுப்பில் மேற்கொண்ட தாக்குதலில்படை அதிகாரிகள் பலர் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பத்துபேர்வரை அதிகாரிகள் தரத்திலானோர் ஆவர். காயமடைந்த இராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களும்பலாலியிலிருந்து கொழும்பு, அனுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யபபட்டுள்ளனர். கி-சி

### வாரமலர் வெளிவரவில்லை

தவிர்க்க முடியாத காரணங்களினால் இன்று "ஈழநாடு" வாரமலர் வெளிவரவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

## வரி விளம்பரம்

**அக்கரைச் சீமையில் நாவல் ரூபா 25/-**

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் அக்கரைச் சீமையில் நாவல் 100 பக்கங்கள் மலிவு விலை ரூபா 25/- எங்கும் கிடைக்கும். (சி 1549)

### சேவை

போட்டோ ஸ்ரட் - 5/- (காகிதாதிகள்தனி)பெருப்பித்தும் (205%) சிறுப்பித்தும்) (48%) கொடுக்கப்படும். 100 ரோணியோ 19/- இரு பக்கம் 29/- ஸ்ரென்சில்-10/- ரைப்பிங் தமிழ் - 7/- ஆங்கிலம் - 8/50. யாழ். மருந்தகம், 470 (250) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 5075

### புலமைப் பரிசில்

ஆண்டு-5 புலமைப் பரிசில் தேர்வுக்கான விஞப் பத்திரம் 1, விஞப் பத்திரம் 2க்குரிய "பொது விவேகம், பொதறிவு" வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். எ-5077

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை சாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம் (சி-1533)


# சி. ஐ. ஏ.யின் துணையுடன் 'ராகுல்' அரசியலில் குதிக்க முயற்சியாம்

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகன் ராகுல் காந்தி அரசியலில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளமை குறித்து இந்திய அரசியல் அவதானிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

ராகுல் காந்தி தற்பொழுது அமெரிக்காவில் கல்வி கற்று வருகிறார். இவர் முன்னர் இந்தியாவில் இருந்த வேளையில் தந்தை, பேர்த்தி, பூட்டன் வழியைப் பின்பற்றி அரசியலில் ஈடுபமாறு கேட்கப் பட்டு வந்தார்.

ஆனால் அப்போது அவர் அரசியலில் தனக்கு நாட்டமில்லையெனவும், நேரு குடும்பத்தின் அரசியல் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வரவே விரும்புவதாகவும் தன் வழியாக அது தொடர்வதை தான் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து இவருக்குப் பதிலாக இவரின் சகோதரி பிரியங்காவை அரசியலுக்குக் கொண்டுவந்து நேரு குடும்பத்தின் அரசியல் ஆதிக்கத்தைக் காப்பாற்ற எடுத்த முயற்சியும் வெற்றி பெறவில்லை.

இந் நிலையில் அமெரிக்காவில் கல்வியை ஆரம்பித்ததன் பின்னர் தனது அரசியல் பிரவேசம் குறித்து ராகுல் வெளியிட்டுள்ள திடீர் அறிவிப்பு பலருக்கு ஆச்சரியத்தையும் இதேவேளை சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவரது அரசியல் பிரவேச அறிவிப்புக்கு அமெரிக்க உளவு ஸ்தானமான சி. ஐ. ஏ. யின் பின்னணி பெரிதும் உண்டு என பலத்த சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவை தனது பிடிக்குள் வைத்திருக்கவே அமெரிக்கா எப்போதும் முயன்று வருகிறது. இதற்காக இந்தியாவில் தனக்கு சார்பான நிலையான ஆட்சி ஒன்றை ஏற்படுத்த சி. ஐ. ஏ. முயல்கிறது.

இதற்காக ராகுல்காந்தியை அது பயன்படுத்துகிறது. அவருக்கு இதற்கான பயிற்சியை அது ஏற்கனவே வழங்கிவிட்டது என்றும் செய்திகள் தற்பொழுது வெளிவரத் தொடங்கியுள்ளன. கி- சி

## 6 சடலங்கள் தகனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதியில் கடந்த 10ம் திகதி இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது பலியாகி அடையாளம் காணப் படாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலங்கள் அடையாளம் காணப் படாததையடுத்து வைத்திய சாலை அரசசெலவில் அவற்றையும் தகனம் செய்தது.

ஆறுசடலங்கள் இவ்வாறு கடந்த வியாழக்கிழமை தகனம் செய்யப்பட்டன. 90-சி

## சமுகமளிக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கான பல அத்தியாவசிய கடமைகள் அஞ்சல் அலுவலகங்களால் மேற்கொள்ளப் பட வேண்டியுள்ளமையால் யாழ் அஞ்சலகத்தினைச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களையும் சிற்றாழியர்களையும் நாளை 17ம் திகதி திங்கட் கிழமை காலை தங்கள் கடமைகளுக்கு தவறாது சமுகமளிக்குமபடி யாழ் பிரதம அஞ்சல்அதிபர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை அவசர விசேட கூட்டம் ஒன்று நடைபெறுற்றது.

இக்கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து மக்களில் பெரும்பாலானோர் தென்மராட்சி பகுதியிலேயே தஞ்சமடைந்துள்ளனர்.

ஆகவே இடம்பெயர்ந்த இம் மக்களை எவ்வாறு பாதுகாப்பது உணவு வசதிகளை அளிப்பது தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயப் பட்டது. 170-சி

## வாவியில் மிதக்கும் சடலங்களின் முகங்களை சீரமைக்க முயற்சி

[பொல்கொட]

பொல்கொட வாவியில் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களின் சிதைந்த முகங்களைப் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை மூலம் சீரமைத்து, சடலங்களுக்கு உரியவர்களை அடையாளம் காண்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு பிரிட்டிஷ் சட்ட வைத்தியர்களினதும், பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர்களினதும் உதவியை இலங்கை பெறவுள்ளது.

இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் யார் என்பதனை அடையாளம் கண்டு அறிவதன் மூலம், கொலையாளியைக் கண்டறிந்துவிடலாம் எனத் துப்பறியும் துறையினர் கருதுவதை அடுத்தே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கி சி

## இரத்ததானம் செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் சகல குறூப் இரத்தத்திற்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் ஏராளமான மக்கள் குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி வைத்தி சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுக்கு இரத்தம் வழங்குவதற்கு இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆகையால் பொதுமக்கள் பொது அமைப்புக்கள் இரத்ததானம் வழங்குமாறு வைத்தியசாலை இரத்த வங்கியினர் கேட்டுள்ளனர். 170- சி

## வயோதிபமாது உயிரிழப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மேற்கு கண்ணகை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த திருமதி மகாலிங்கம் புக்காரா தாக்குதலுக்கு இலக்காகி பலியானதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

வயதுமுதிர்ந்தவரான இவர் வாத நோய் காரணமாக நடக்கமுடியாது அங்கிருந்ததாகவும் அவரது மகனின் வீட்டுக்கு மேல் புக்காரா குண்டு வீச்சுக்கு இலக்காகி அவர் ஸ்தலத்திலேயே பலியானதாகவும் தெரிவிக்கப் படுகிறது. 139-சி

## கட்டணம் அறவிடப்படாது

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர் மையப் பகுதியில் அமைந்திருக்கும் நவீன கழிவறை பாவனையாளர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாக மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

வலிகாமம் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் யாழ் நகரில் அதிகளவில் நடமாடுவதாலும், நவீன சந்தைப் பகுதிகளில் இடம் பெயர்ந்த மக்கள் அதிகளவில் தங்கிவருவதாலும் இம் மக்களின் நன்மை கருதி நவீன கழிவறை பாவனையர்ளர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. -162

## மருந்து தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் மருந்து வகைகளுக்குப் பெருந் தட்டுபாடு நிலவுவதால் வெளிநோயாளர் பிரிவில் மருந்து பெறவரும் பொது மக்கள் பெரிதும் பாதிக்கபட்டுள்ளனர்.

தம்மிடமிருக்கும் மருந்துகளை வழங்கி விட்டு, தம்மிடம் இல்லாத மருந்துகளை வெளியில் உள்ள மருந்துக்கடைகளில் பெறுமாறும் வைத்திய சாலை வட்டாரங்களால் நோயாளர்கள் அறிவுறுத்தப் படுகிறார்கள். 162

## மணிரத்தினம் மீதான தாக்குதலுக்கு 'அல்உமா' மீது சந்தேகம்

(சென்னை)

இந்தியாவின் பிரபலதிரைப் பட தயாரிப்பாளர் மணிரத்தினத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு' 'அல் உமா'' என்னும் இஸ்லாமிய தீவிரவாத இயக்கமே காரணமென சந்தேகிக்கப்படுகிறது.

மணிரத்தினம் தயாரித்த ''பம்பாய்'' என்னும் தமிழ்த் திரைப்படம் இந்து - முஸ்லீம் கலவரத்தை பின்னணியாகக் கொண்டது. இவர் மீதான தாக்குதல் இதனுடன் தொடர்புடையதாக இருக்கலாமெனவே கருதப்படுகின்றது.

இதேவேளை மணிரத்தினம் தற்பொழுது சுகமடைந்து வருவதாகவும் ஆனல் குண்டு வெடிப்பு அதிர்ச்சியினல் அவரது பார்வை மற்றும் கேட்கும் திறன் பாதிக்கப் ட்டுள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சென்னையில் இந்து முன்னணி அலுவலகத்தில் கடந்த ஏப்ரலில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் 'அல் உமா' வின் வேலையெனவே கருதப்படுகின்றது. -கி

## ராஜீவ் கொலை வழக்கு விசாரணைக்குசெல்லாதிருக்க பிரியங்காவுக்கு அறிவுறுத்து

(புதுடில்லி)

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு விசாரணையின்போது சமுகமளிக்க வேண்டாமென நரசிம்மராவ் அரசாங்கம் ராஜீவ்காந்தியின் மகளான பிரியங்காவை கேட்டுள்ளது.

ராஜீவ்காந்தியின் விசாரணையின்போது சமுகமளிப்பது பிரியங்கா காந்தியின் சொந்தப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலால் அமையக்கூடுமென்பதினலேயே இவ்வாறு நரம்சிம்மராவ் அரசாங்கம் கேட்டுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. க-கி

## இடைஞ்சல் செய்யாதீர்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையின் போது காயமடைந்தவர்களை அவசரமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரும் போது இடைஞ்சல்கள் ஏற்படாதவாறு மக்களை வீதியில் ஒழுங்குபடுத்தி வாகனங்கள்செல்வதற்கு வசதியாகவீதி ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது.

தமிழீழ காவல் துறையினர் வீதிக்குவீதி, சந்திக்குச்சந்தி நின்று இவ்வொழுங்குமுறைகளை. மேற் கொண்டுநடத்திக் கொண்டிருக்கின்றனர். 90-கி

## ஏற்பினல் பெண் மரணம்

[யாழ்ப்பாணம்]

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் திருக்கை முன் குத்திய இளம் பெண் ஏற்பு தடுப்பூசி போடாது, சிகிச்சையை மேற்கொள்ளாது விட்டதினல் ஏற்புவலியினல் மரணமானர்.

ஏற்புவலி கண்டபின்பே இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டும் நோய் குணமடையாது நேற்று முன்தினம் அதிகாலை அங்கு மரணமானர்.

குருநகரைச்சேர்ந்த பிலிப்பு லட்சுமி [15 வயது] என்ற இளம் பெண்ணே மரணமானவராவார். -90

## விபரங்கள் பதிவு

(மானிப்பாய்)

வலி மேற்கு வலிவடக்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து யாழ் நகரப் பகுதியிலும் ஏனைய இடங்களிலும் தங்கியிருக்கும் மக்களின் விபரங்கள் அவ்வப் பகுதி கிராம சேவையாளர்களினல் தற்போது திரட்டப்பட்டு வருகின்றது. 71


**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணியாளர்களின்**

# கவனத்திற்கு

தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிகள் தொடர்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்ட செயலகத்தில் தற்காலிகமாக இயங்கும் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

த. பொ. மே. நிறுவனம்

(ஏ-5107)

மணிவாக்கு

தானுடாவிட்டாலும் தன் தசை ஆடும்.
— தமிழ் பழமொழி

# நமது நோக்கு

## நிறைகுடம் தளம்பாது

இலக்குகளைத் தெரிவு செய்து சரியாகத் தாக்கக் கூடிய ஜெற் ரக புக்காரா விமானம் விடுதலைப்புலிகளின் விமான எதிர்ப்புப் பிரிவினரால் 8.000 அடி தூரத்தில் பறந்துகொண்டு இருக்கும்போது சுட்டு வீழ்த்தப்பட்டது யுத்தத்தில் ஒரு புதிய பரிணாமத்தை உருவாக்கியுள்ளது. சிறிலங்கா இராணுவ ஆய்வாளரை திகைக்க வைத்துள்ளது; வெளியுலக ஆய்வாளர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது. அத்துடன் முன்னேறிவந்த ஆயிரக்கணக்கான சிங்களச் சிப்பாய்களின் வியூகங்களை உடைத்துக்கொண்டு சிறு தொகையினரான விடுதலைப் புலிகள் ஊடறுத்து, எதிர்த்தாக்குதல் நடாத்தி அவர்களைத் துரத்தியடித்தது தேசியத் தலைவர் பிரபாகரனின் இராணுவ சாணக்கியத்தை எடுத்துக்காட்டுகிறது என்று உலகமே வியக்கிறது.

இனப்பிரச்னைக்கு யுத்தத்தைத் தவிர்த்து சமாதானத் தீர்வொன்றைக் காண முயலுமாறு குரல்கள் வெளிநாடுகளிலிருந்து சிறிது சிறிதாக வெளிவரத் தொடங்கியுள்ளது. கனடா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் அவுஸ்திரேலியாவும் சமாதான வழியை நாடுமாறு கூறியுள்ளன யுத்தத்தினுல் இனப்பரச்னைக்குத் தீர்வு ஒன்றை அடைய முடியாது எனவும், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவிகள் வழங்குவதாகக் கொடுத்த உறுதிமொழியை மீண்டும் புதுப்பித்துக்கொள்வதாக கனடா அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதேவேளை அரசினுல் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளினுல் ஏற்பட்டுவரும் அழிவுகளைத் தவிர்த்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டுமென்று ரஷ்ய அரசாங்கம் கேட்டுள்ளது. அவுஸ்திரேலிய அரசாங்கம் வடபகுதியில் மீண்டும் போர் ஆரம்பித்துள்ளது குறித்து, ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும், போரில் தற்போது ஏற்பட்டுவரும் பொதுமக்கள் அழிவைத்தடுக்க கூடுதல் கவனம் எடுக்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளது. இவற்றை எல்லாம் செவி சாய்க்காது சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் வெல்லமுடியாத போரைத் தொடர்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்காக சிறிலங்கா அரசு எடுத்துள்ள பாரிய இராணுவ நடவடிக்கையை எதிர்த்து சென்னையில் மறுமலாச்சி தி.மு.க ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்தி சிறிலங்காவின் பிரதித் தூதுவரிடம் ஒரு மகஜரையும் சமர்ப்பித்துள்ளது. பேரணியின் போது "எங்கள் இரத்தம் எங்கள் இரத்தம் ஈழ மக்கள் சிந்தும்இரத்த " என்று கோஷம் எழுப்பப்பட்டது. அதேவேளை யாழ். குடாநாட்டின்மீதான தாக்குதலைக் கண்டித்து தி.மு.க. எதிர்வரும் திங்கட்கிழமை உண்ணவிரதப் போராட்டம் நடத்தப்போவதாக கருணநிதி அறிவித்துள்ளார். அன்றையதினம் பொதுமக்களை கறுப்புப்பட்டி அணியுமாறும் கேட்கப்பட்டுள்ளது. நேர்மையான உக்கிரமான போராட்டம் ஒன்றை தமிழீழ மக்கள் சரியான தலைமையின், வழிகாட்டலின் கீழ் நடாத்திக் கொண்டிருக்கும்போது, தமிழகத் தமிழர்களென்ன, உலகத் தமிழ் இனமும் பார்த்துக்கொண்டு வாழாதிருக்காது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பது பொய்யாமொழி. சாதாரண தமிழகப் பொதுமக்களை நெடுங்காலம திசை திருப்பி வைக்க முடியாது.

சிறிலங்கா அரசின் அமைச்சர்களும் இராணுவ உயர் அதிகாரிகளும் "முன்னேக்கிப் பாயும்" முதல் கட்ட நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகள் தங்களுக்கே உரித்தான யுத்த தந்திரோபாயத்தின் ஓர் அம்சமாக சில நாட்கள் வரை படையினரை முன்னேறவிட்டமையை புலிகள் பயந்து விட்டார்கள், தாக்குப்பிடிக்காத நிலையில் ஒழித்துவிட்டார்கள் என்றெல்லாம் குதூகலித்தனர். அவர்களின் குதூகலம் கட்டுக்கடங்காமற்போய் விடுதலைப் புலிகளை கேலி செய்யும் வகையில் வார்த்தைகளையம் பிரயோகித்தார்கள். பிரிகேடியர் சரத்முனசிங்கா தேசியத் தலைவர் பிரபாகரனைக்கூட கேலி செய்யும் வகையில் பேசியுள்ளார். அவர் எங்கு இருக்கிறார் என்பது இதுவரை தெரியவில்லை. அவர் இருக்கும் இடத்தையே தேடிக்கொண்டிருக்கிறோம். அவர் இருக்கும் இடத்தையும் கண்டுபிடித்துவிட்டால் யுத்தம் முடிவுக்கு வந்துவிடும் என்றும் கூறியுள்ளார். உண்மையில் நடந்தது என்ன? விடுதலைப் புலிகள் தங்கள் தலைவரின் கட்டளைப்படி இராணுவத்தைத் தேடிக் கண்டுபிடித்து விரட்டி அடித்து பின்னேக்கிப் பாய வைத்துள்ளனர். அதிகாரம் அதிகரிக்கும்போது பொறுப்புள்ளவர்கள் வாயடக்கத்துடன் பேசுவார்கள். வாயடக்கம் என்றால் என்னவென்றே தெரியாத சிறிலங்கா தலைவர்கள் நிறைகுடம் போன்ற புனித இயக்கத்தைப்பற்றிப் பேசவும் தகுதியற்றவர்கள்.

விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதலால் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொன்றொழிக்கப்பட்டதையும் பெருந் தொகையான சிப்பாய்கள் படுகாயமடைந்ததையும் சிறிலங்கா மக்களிடமிருந்து பிரிகேடியர் சரத்முனசிங்காவும் அரசும் மூடிமறைக்கப் படாதபாடுபடுகின்றனர். இது கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் வதந்திகளை உருவாகுவதற்கு வழிவகுத்துக் கொடுத்துள்ளது. இராணுவத்தின் வெற்றியில் நம்பிக்கை கொண்டிருந்த சிங்களவர்கள் விடுதலைப் புலிகளின் வீரதீர எதிர் தாக்குதலால் நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்டமைக்கு அரசே காரணம் என்று இப்போது குற்றம் சாட்டப்போகின்றனர்.

---

★ சித்தன்கேணிப் பகுதியில்

# ஐந்து வீடுகளை இராணுவம் குண்டு வைத்து தகர்த்தது

(வட்டுக்கோட்டை]

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வர் கோவிலுக்கு (சிவன் கோவில்) வடக்குப் பக்கமாக உள்ள 5 வீடுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. காலஞ்சென்ற ஓவசியர் தியாகராசா, ஆசிரியை திருமதி பூரணம் வேலாயுதபிள்ளை ஆகியோரது வீடுகளே படையினரால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளனவாம் இதேவேளை புக்காரா குண்டு வீச்சினுல் இப்பகுதியில் உள்ள வீடுகள் பலவும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

139 சி

# 500 முதல் 700 படையினர் வரை இறந்ததாக கொழும்பில் தகவல்

(கொழும்பு)

வலிகாமம் வடக்கில் அரச படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலில் இறந்த படையினர் தொகை சிலர் குறிப்பிட்டதுபோல ஐநூறு முதல் எழுநூறு ஆ இல்லை. ஆனுல் கூடுதலானவர்கள் இறந்திருக்கலாம் என்று பிரிகேடியர் சரத்முனசிங்க பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பிரிகேடியர் சரத்முனசிங்க மேலும் தெரிவிக்கையில்: வெள்ளிக்கிழமை அதிகாலை 1-30 மணியளவில் விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மேல் தாக்குதல் தொடுத்தார்கள். இது சண்டிலிப்பாய், அளவெட்டி பகுதியில் இடம் பெற்றது. இந்தத் தாக்குதல் நண்பகல் வரை நீடித்தது

இதேநேரம் யுத்தமுனையில் இராணுவத்தினருக்கு உதவியாகஇருந்த 'புக்காரா' விமானம் காலை 7-15 மணியளவில் சுட்டு வீழ்த்தப்பட்டது. சண்டிலிப்பாயில் இருந்து 3 கிலோமீற்றர் தூரத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இந்தப்போரில் இறந்த படையினரின் 14 சடலமும் 42 பேர் காயமுற்றும் பலாலி இராணுவ முகாமுக்கு எடுத்து வரப்பட்டிருக்கின்றன. ஆனுல் இறந்த படையினரின் முழுத் தொகையும் கூறமுடியாது. பெருமளவு படையினர் இறந்திருக்கலாம். கொழும்பில் பல இடங்களிலும் கூறப்படுவது போன்று ஐநூறு முதல் எழுநூறுவரை இராணுவத்தினர் இறக்கவில்லை. உண்மையான தகவல்கள் கிடைத்ததும் தெரியப்படுத்துவோம்" என்ருர்.

ம-சி

# மக்கள் அழிவைக் கண்டிக்காத அமெரிக்காவின் மீது கண்டனம்

(மணிலா)

இலங்கையின் தற்போதைய யுத்த நிலைக்கு விடுதலைப் புலிகளைக் குற்றம்சாட்டியுள்ள அமெரிக்கா, நவாலியில் சென். பீற்றர்ஸ் ஆலயத்தின்மீது அரசின் விமானப்படை மேற்கொண்டகுண்டுவீச்சில் பெருந்தொகையான பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கு இலங்கையை கண்டிக்காமைகுறித்து ஆசிய கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் அதிகாரபூர்வ ஒலிபரப்பான 'வெரித்தாஸ்' விசனம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசைக் கண்டிக்க அமெரிக்கா மறுத்துவிட்டதையும் 'வெரித்தாஸ்' சுட்டிக்காட்டியுள்ளது

இதேவேளை விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை இலங்கை அரசு வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என அரசின் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தியுள்ள அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சு நவாலி தேவாலயம் மீதான தாக்குதல குறித்து விசாரணை மேற்கொள்ளப்படுமென ஜனுதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளதையும் வரவேற்றிருக்கிறது. ஆனுல் ஆலயத்தில் அடைக்கலம் புகுந்திருந்த அகதிகள் குண்டுவீசி கொல்லப்பட்டமைக்கு அனுதாபம் தெரிவிக்கவோ அன்றிக் கொல்லப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவோ அத தவறிவிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கி-சி

# கிளிநொச்சியிலும் மக்கள் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

வலிமேற்குவலிவடக்குபகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த மக்களில் பலர் கிளிநொச்சி பகுதியிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்து தென்மராட்சி பகுதிக்கு சென்ற மக்கள் கிளாலியூடாக கிளிநொச்சி பகுதிக்கு சென்றிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது..

170-சி

## குடும்பத்துக்கு 3 கிலோ சீனி

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடைகளில் ஒரு குடும்பத்துக்கு மூன்று கிலோ சீனியும், ஒரு பக்கற் லக்ஸ்பிறேயும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

தேவையான பொருட்கள் யாழ். செயலக புனர் வாழ்வுப் பிரிவால் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

154- சி

வட்டுக்கோட்டையில்

# கோபுரம் சேதம்; வர்த்தகர் பலி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோவிலடியில் புக்காரா விமானம்குண்டு வீசிய போது கோவிலின் மேற்கு வாசலிலுள்ள கோபுரம் சேதமடைந்ததாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இக்குண்டு வீச்சின்போது மேற்கு வீதியில் பலசரக்குக் கடை உரிமையாளர் கத்தையா என்பவர் ஸ்தலத்திலே பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் சரமாரியாக ஷெல் தாக்குதல் புக்காரா விமானக்குண்டு வீச்சுக்களும் இடம் பெற்றமையால் பலர் பலியாகி இருக்கலாமெனவும் நம்பப்படுகிறது.

139-சி

# சித்தன்கேணிசிவன்கோவில் புக்காரா தாக்குதலில் சேதம்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி சிவன் கோவில குண்டுத்தாக்குதலினுல் பலத்த சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சித்தன்கேணியைச் சேர்ந்தவர்கள் பலர் புக்காரா குண்டுத் தாக்குதலுக்கும் ஷெல் தாக்குதலுக்கும் பயந்து இக்கோவிலில் தஞ்சமடைந்திருந்தனர். சங்கானை, சங்கரத்தை, வட்டுக்கோட்டை பகுதிகளில் சரமாரியான தாக்குதல் இடம் பெற்றமையாலும் இப்பகுதியில் இராணுவத்தினர் வந்துள்ளனர் என்ற பீதியாலும் இங்கு தஞ்சமடைந்தவர்கள் வெளியே வராது அங்கு இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இக்கோவில் புக்காரா தாக்குதலினுல் பலத்த தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டமையினுல் இங்கு தஞ்சமடைந்த பொதுமக்களின் நிலை பற்றி எதுவும் தெரியவில்லை.

139-சி

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தற்போது நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கையினுல் பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்து, இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் செறிந்து வாழ்வதினுல் பல தொற்றுநோய்கள் மிக விரைவாகப் பரவிப் பாரியதொற்று பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். எனவே, இத்தகைய நோய்கள் பரவாது தடுத்து இவற்றின் பாதிப்பிலிருந்து உங்களையும், ஏனைய மககளையும் பாதுகாக்கப் பின்வரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு கேட்டுள்ளது.

நெருப்புக் காய்ச்சல், வாந்திபேதி, வயிற்ருேட்டம் முதலிய நோய்கள் பரவாதிருக்க கொதித்தாறிய அல்லதுகுளோரின் இடப்பட்ட நீரையே அருந்துங்கள்.

மக்கள் செறிந்து வாழும் பொழுது நீர் பற்ருக்குறை ஏற்படுமாதலால். அவசியமாக நீர் சிந்துதலைத் தவிர்த்து மற்றவர்களுக்கும் போதியளவு நீர் கிடைக்க உதவுங்கள்.

இயன்றளவு சமைத்தவுடன் சூடாகவே உணவை உட்கொள்ளவும், சமைத்த உணவை இலையான், கரப்பான் முதலியவற்றிலிருந்து பாதுகாத்து மூடிவைக்கவும். ஆறிய உணவுகளை மீண்டும் சூடாக்கி உட்கொள்ளவும். குழந்தைகளுக்கு குளிரூட்டப்பட்ட உணவுகளையும், பானங்களையும்கொடுப்பதைத் தவிர்க்கவும்.

அனைவரும் உணவு தயாரிக்க, உட்கொள்ளமுன்னரும் மலம் கழித்தபின்னரும் சவர்க்காரமிட்டோ அல்லது வெறும் நீரிலோ கைகளை நன்ருக அலசிக் கழுவவும்.

அனைவரும் கட்டாயமாக மலகூடங்களைப் பாவிக்கவேண்டும். மலகூடம் இல்லாத விடத்து தற்காலிக அகழி மலகூடங்களை அமைத்துப் பாவிக்கவும். குழந்தைகள், சிறு பிள்ளைகள் இவற்றுக்கு வெளியே மலங்கழித்தால் அவற்றை அள்ளி மலகூடங்களில் இடவும். குப்பைகூளங்கள், சமையலறைக் கழிவுகள் முதலியவற்றை இவற்றிற்கென அமைக்கப்பட்டிருக்கும் கொள்கலன்களில் அல்லது குழிகளில் மட்டுமே இடவும் எனவும் அவ் அறிவுறுத்தலில்மேலும்கூறப்பட்டுள்ளது சி

# யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தில் காணுமல் போனவர் விபரங்கள் பதிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது காணுமல் போனவர்களை பதிவு செய்யும் வேலைகள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டன.

வலிகாமம் பகுதியில் காணுமல் போனவர்கள் மற்றும் தவற விடப்பட்டவர்களின் விபரங்களையே யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பதிவு செய்து வருகின்றது.

-170

# பதில் தாக்குதல் நடப்பது போரில் வழமையாம்

(கொழும்பு)

பெருமளவிலான இராணுவ நடவடிக்கை ஒன்று எடுக்கப் படும்போது, அதறகுப் பதில் தாக்குதல் ஒன்றை எதிர்பார்ப்பது வழமையானதே என, வலிகாமத்தில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலைக் கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் நியாயப் படுத்தி இருக்கின்ருர்.

'வெற்றி நமக்கே' எனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் 'முன்னேற்றப் பாய்ச்சல்' குறித்துக் கூறிவந்த அரசு, விடுதலைப் புலிகளின் இந்த திடீர் அதிரடிப் பாய்ச்சலினுல் அதிர்ச்சி அடைந்து இருப்பதையே இராணுவ அதிகாரியின் இக்கூறறு தெளிவாக்குவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சண்டிலிப்பாய்-அளவெட்டிப் பகுதிகளில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பெரும் தாக்குதல் குறித்த உண்மை நிலையை அரசு மூடிமறைப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் இராணுவத் தலைமையகம் தெரிவித்ததைவிட, இராணுவத்தினரின் உயிரிழப்பு பன்மடங்கு அதிகமானது என்ற செய்தியை உலகுக்குத் தெரியப் படுத்திய 'ராய்ட்டர்' செய்தி நிறுவனம் அரசு அதிகாரிகளின் பாய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளது. கி சி

# தினமும் தொடரும் ஷெல் தாக்குதல் மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

பலாலியில் இருந்து இராணுவத்தினர் தினமும் காலை முதல் மாலை வரை தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலை தொடர்ந்து பெருமளவு மக்கள் வலி வடக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

மல்லாகம், ஊரெழு, புன்னலைக் கட்டுவன், உரும்பராய், மருதனுர்மடம், ஈவினை இணுவில் போன்ற பகுதிகளில் இருந்தே மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இடம் பெயர்ந்த மக்கள் கோப்பாய், புத்தூர் மற்றும் தென்மராட்சி போன்ற பகுதிகளை நோக்கி செல்கின்றனர். 170- சி

# இராணுவத்தின் பிடிக்குள் 1500 பொதுமக்கள்

(கொழும்பு)

வலிகாமம் மேற்குப் பகுதியில் படையினர் வசமுள்ள பகுதிகளில், தற்போது சுமார் 1,500 பொதுமக்கள் உள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

இப்பகுதிகளில் படையினரிடம் அகப்பட்ட பொதுமக்கள், ஆலயம் ஒன்றில் தங்கி இருந்ததை 'ரூபவாஹினி' கடந்த வியாழக்கிழமை காண்பித்தது.

இராணுவத்தினர் இப்பகுதிகளில் திடீரென மேற்கொண்ட நடவடிக்கையால் வெளியேற முடியாத பொதுமக்களே படையினரிடம் சிக்கிக்கொண்டனர். கி சி

# இடம்பெயர்ந்தோர்வீடுகளில் திருடர்கள் கைவரிசை

(கொழும்புத்துறை)

வலி மேற்குப் பகுதியில் பொன்னலை, மூளாய், சுளிபுரம், தொல்புரம், வடலியடைப்பு, நவாலி ஆகிய பகுதிகளில் மக்கள் இடம் பெயர்ந்த வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் தினமும் இடம் பெற்று வருவதாக அப்பகுதியிலிருந்து வருபவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப் பகுதிகளில் வீடுகளின் கதவுகள் பலவந்தமாக உடைக்கப்பட்டு வெகுமதி மிக்க பல பொருட்கள் திருடப்பட்டு வருகிறது.

தொல்புரம பகுதியில் சிலரின் வீடுகள் உடைக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களின் பெறுமதிமிக்க உடமைகளைத் திருடிக் கொண்டிருந்தவர்கள் அகப்பட்டுக் கொண்டதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். 154- சி

# இடம்பெயர்ந்த ப. நோ. கூ. சங்கக் கிளைகளை திறக்க முயற்சி

[யாழ்ப்பாணம்]

பண்டத்தரிப்பு, சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளை யாழ். நகரம் மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் தற்காலிகமாக இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் மேற்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணச் சேவைகளை மேற்கொள்ளும் பொருட்டே மேற்படி சங்கங்களின் கிளைகள் திறக்கப்பட உள்ளன.

இடம் பெயர்ந்த மக்கள் தற்போது தங்கியிருக்கும் பகுதிகளிலேயே சங்கக் கிளைகள் திறக்கப்பட உள்ளதாக யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. 170 சி

# கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வர்த்தகத் திணைக்கள கிளைகளிலும் கட்டுப்பாட்டு விலைக்குப் பொருட்கள் விற்கப்பட்டு வருகிறது.

ஒரு கிலோ சீனி 38 ரூபா, மைசூர்ப் பருப்பு கிலோ 38 ரூபா, லக்ஸ்பிறே பைக்கட் 60 ரூபா, கச்சான் கிலோ 45 ரூபா, தேயிலை உட்பட பல பொருட்கள் மிகக் குறைந்த விலையில் தற்போது விற்பனையாகி வருகிறது.

154- சி

# விஷேட நிவாரணத்திற்கு பதியுமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்

இடம்பெயர்ந்த மக்கள் இதுவரை ஒருவாரகால விசேட நிவாரணத்துக்கு பதியாதவர்கள் உடனடியாக தாம் தற்போது தங்கியிருக்கும் கிராம சேவையாளருடன் தொடர்புகொண்டு பதியுமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இடம் பெயர்ந்தவர்களில் பெரும்பாலானேர் முகாம்களில் தங்கியுள்ளனர். ஆனுல் சிலர் உறவினர்களின் இல்லங்களிலும் தங்கியும் உள்ளனர்.

இப்படி உறவினர்களின் வீடுகளில் இருப்போர்உடனே தாம் தங்கியிருக்கும் கிராம சேவகரை சந்தித்து நிவாரணத்துக்கு பதிவுசெய்துகொள்ளுமாறும் அரச அதிபர் இடம் பெயர்ந்த மக்களை கேட்டுள்ளார். 170-சி

# அரசியல் சீர்திருத்தத்தை அரசு முன்னெடுக்கும்

(கொழும்பு)

யுத்தத்தின் முடிவு எப்படி இருந்தபோதிலும், அரசியல் சீர்திருத்தத்தை முன்னெடுக்க அரசு உறுதியாகவே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அரசின் இன்றைய நிலை குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கான கூட்டம் ஒன்று, கொழும்பு ராஜகிரியவில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முக்கிய அமைச்சர்களான றிச்சர்ட் பத்திரன, ஜி. எல். பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர், தர்மசிறி சேனநாயக்க, அஷ்ரப் உட்படப் பலர் கலந்து

(5ம் பக்கம் பார்க்க)

# மாணவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய யுத்த நிலையில் மக்களைப் பராமரித்தல், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைப் புரிதல், பதுங்கு குழிகளை அமைத்தல், இரத்த தானம் வழங்கல் போன்ற பல்வேறு உதவிகளுக்கும், கல்விச் சமூகத்தின் பங்களிப்பு பெரிதும் தேவைப்படுகின்றது.

ஆகவே அவ்வாறு உதவி செய்ய விரும்பும் மாணவர்கள், ஆசிரியர்கள் அதிபர்கள் ஊடாகவேனும், நேரடியாகவேனும் பல்கலைக்கழகம் முன்பாகவுள்ள (குமாரசாமி லேன்) விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். சி

# முகாம்களில் இருப்போர்க்கு உலர்உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்து யாழ் பிரதேச செயலர் பிரிவில் தஞ்சமடைந்திருக்கும் 10,140 அகதிகளுக்கு இவ்வாரம் உலர் உணவு பெறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக யாழ் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ் நகரில் அடைக்கல மாதா பாடசாலை, சன்மார்க்க மகாவித்தியாலயம், சென் ஜோன்ஸ் கல்லூரி, ஜோன் பொஸ்கோ ஆகிய நான்கு முகாம்களில் தங்கியிருக்கும் 681 குடும்பங்களைச் சேர்ந்த 2811 உறுப்பினர்களுக்கும், உறவினர் வீடுகளில் தங்கி இருக்கும் 1916 குடும்பங்களைச் சேர்ந்த 7329 உறுப்பினர்களுக்கும் இவ் வாரத்துக்கான உலர் உணவு பெறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது

இவர்களுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு, கைலன்ட் பால் மா ஆகிய உலர் உணவு பொருட்கள் வழங்கப்படவுள்ளதென்றும் அவர் தெரிவித்தார். 162- சி

# வீடு பார்க்கச் சென்றவர் ஷெல் தாக்குதலில் பலி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயிலுள்ள தனது வீட்டைப் பார்த்துவரச் சென்றவர் அங்கு இடம் பெற்ற ஷெல் தாக்குதலினுல் அவ் விடத்திலேயே பலியானர்.

மானிப்பாயில் இருந்து இடம் பெயர்ந்து ஆனைக் கோட்டையில் வசித்து வரும் சந்தியாபிள்ளை வசந்தகுமார் [38 வயது] என்பவரே பலியானவராவார்.

சடலம் யாழ்: போதனு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. [90 ரி]

# அரச அதிபர் கோரிக்கை

(மானிப்பாய்)

குடாநாட்டில் தற்போது இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளினுல் இடம் பெயர்ந்துள்ள யாழ் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள், அவ் அலுவலகங்களில் பணி புரியும் உத்தியோகத்தர்கள் கிராம சேவையாளர்கள் ஆகியோரை தற்போது அவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு அருகாமையிலுள்ள பிரதேச செயலர் அலுவலகங்களில் பணிபுரியுமாறு யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டமொன்றும் யாழ் செயலகத்தில் இடம் பெற்றதுடன் உத்தியோகத்தர்களின் விபரமும் திரட்டப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது. 71-சி

## இலங்கை அரசு மேற்கொள்ளும்

# மனிதப் படுகொலையை நிறுத்த வெளிநாடுகள் வற்புறுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் மனிதப்படுகொலை, இன அழிப்பை உடன் நிறுத்த இலங்கை அரசு மீது வெளிநாடுகள் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டுமென கோருவதென யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடாத்திய கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ சிறில் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இன அழிப்பு மனிதப் படுகொலைகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறுவதோடு இனப்படுகொலையை உடன் நிறுத்த அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு கொழும்பில் உள்ள சகல வெளிநாட்டு உயர்ஸ்தானிகராலயங்களையும் மகஜர்கள் மூலம் கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: இன்றைய யுத்த சூழ்நிலையில் இரத்ததானம் செய்தல், குண்டு வீச்சுகள், ஷெல் தாக்குதல்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதன் முன் நடவடிக்கையாக பொது இடங்கள், வீதி ஓரங்கள், பொது மைதானங்கள், மக்கள் கூடும் இடங்களில் பதுங்குகுழிகள் அமைத்தல், வீதி ஒழுங்குகளைக் கவனித்தல், வைத்தியசாலைப் பராமரிப்பு ஆகியவைகள் வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்களால் கவனித்தல் என்பனவாகும். 162-சி

# புலியாய் மாறு

வெடியோசை கேட்டெங்கே
வீழ்ந்தெழுந்து ஓடுகிறாய்?
முடியாத தொன்றில்லை
மூச்சிருந்தால!
விடிகாலை—
வெளியா யெறிக்குதுபார்
வெள்ளிதிசை காட்டுதுபார்
ஒளிவானேன்?
ஓடியிங்கே வா!

.................................

குண்டெறிந்து உறவுகளை
குருத்துக்களைக் கனவுகளை
நின்றபடியே புதைத்துச்
சென்றவரின்
வண்டழிந்து
சண்டிலிப்பாய்க் குளத்துக்கும்
சாவடைந்து போனதுவாம்
முந்தியதைப் பார்
புலியாய் மாறு!

— நிம்மதி

## கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கான பணக்கொடுப்பனவுகள் மேற்படி வங்கியின் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மாவட்டத் தலைமைக் காரியாலயத்தில் நாளை 17ம், திகதி முதல் காலை 9-00—10-00 மணிவரை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## முக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த மக்களின் பாதுகாப்பும் நிவாரணமும் குறித்து கலந்தாலோசிக்க நாளை திங்கட்கிழமை காலை 10·00 மணிக்கு யாழ். பிரதேச செயலர் பணிமனையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தலைமையில் முக்கிய கூட்டம் நிகழவிருக்கிறது.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அரசசார்பற்ற நிறுவனங்கள், சகல கிராம அலுவலர்கள், சனசமூக நிலையத் தலைவர்கள், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்கள், வணக்கத்துக்குரிய குருமார்கள், கிணைக்களத் தலைவர்கள் அகதிமுகாம் பாடசாலை அதிபர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. -சி

## அரசியல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

அரசியல் சீர்திருத்தத்தை முன்னெடுப்பதற்கு முன்னர், யுத்தத்தின் விளைவுகள் அறியப்பட வேண்டியுள்ளதாக அமைச்சர்கள் தெரிவித்தனர். கி சி

## சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயம் தொடர்பாக அறிக்கை வெளியிடுவதற்கு முன்னர் அதுகுறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அரசுடன் ஆலோசித்திருக்க வேண்டுமென வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

சர்வதேச ரீதியில் பொறுப்புடன் செயற்படவேண்டிய உலக நிறுவனமொன்று இவ்வாறு செயற்படுவது தனக்கு அதிர்ச்சி தருவதாக ஜனாதிபதி சந்திரிகா நேற்று கொழும்பில் கூறினார்.

ஆனால் நவாலி தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதியை தாம் சந்திக்க முயற்சி செய்ததாகவும் அதற்கு அனுமதிமறுக்கப்பட்டதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு பிரதிநிதி கூறியிருக்கிறார். ஆனால் இக்கூற்றை மறுத்துள்ள ஜனாதிபதி இது தனக்கு அதிர்ச்சியைத் தருவதாகத் தெரிவித்துள்ளார். கி-சி

# இராணுவத் தாக்குதலுக்கு காமினியின் மகன் ஆதரவு

(கொழும்பு)

வடக்கில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவநடவடிக்கையை காமினியின் மகன் நளின் திசநாயக்க வரவேற்றுள்ளார்.

முன்னாள் அமைச்சரான காலஞ்சென்ற காமினி திசநாயக்காவின் புத்திரரான இவர், சந்திரிகா அரசைக் கடுமையாகச் சாடி வருபவர். எனினும் இவ்விடயத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார்.

தனது தாயார் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவை எதிர்த்துப் போட்டியிட்ட வேளையில், இவர் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு இலங்கையை ஆளுவதற்குத் தகுதியற்றது என்ற வகையிலும், இனத் துவேஷத்தை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் உரையாற்றி வந்தவர். கி சி

# செவ்வரத்தம்பூ உயிரை பறித்தது

(நெல்லியடி)

பாலகனின் கையில் விளையாடக் கொடுத்த செவ்வரத்தம் பூ இதழ் தொண்டையில் ஒட்டிக் கொண்டமையால் அப்பாலகன் பரிதாபமாக மரணமானான்.

பருத்தித்துறை தம்பசிப்பட்டி பகுதியில் இப்பரிதாப சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கௌதமன் - உதயகுமாரன் (வயது: 7 மாதம்) என்னும் பாலகனே பரிதாபகரமாக மரணமானவராவார்.

மந்திகை மருத்துவமனைக்கு எடுத்துவரப்படுகையில் இவர் வழியில் மரணமானார் -160-கி

# பிறப்பு சான்றிதழ் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(நல்லூர்)

யாழ். இறப்பு பிறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பழுதடைந்திருந்த போட்டோபிரதி செய்யும் இயந்திரம் தற்பொழுது திருத்தப்பட்டுள்ளது.

செயலகத்திற்கு இரண்டு மணித்தியாலங்கள் மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதால் இவ் இயந்திரமும் இரண்டு மணித்தியாலம் மட்டுமே பாவிக்கப்படுகின்றது. இதனால் பெருமளவு விண்ணப்பங்கள் தேங்கியுள்ளன.

தற்பொழுது பிறப்புஎழுதும் சான்றிதழ்கள், போட்டோ பிரதி பண்ணும் தாள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் 1954-ம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களின் விண்ணப்பங்கள் ஏற்கப்படுவதில்லையென தெரிவிக்கப்படுகிறது.

அவசரதேவைக்கு காரணம் காட்டுபவர்களின் விண்ணப்பம் ஏற்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது- 175-சி

# இடம்பெயர்ந்தோருக்கு உதவக் கோரிக்கை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் இடம் பெயர்ந்துள்ள மக்களின் துயரங்களைப்போக்கி அவர்களுக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அந்தப் பகுதியிலுள்ள இந்து இளைஞர் மன்றங்கள், இந்து சமய நிறுவனங்கள், ஆலய பரிபாலனசபைகள் ஆகியன ஒருங்கிணைந்து இடம் பெயர்ந்து முகாம்கள், பொது ஸ்தாபனங்களில் தஞ்சம்புகுந்துள்ள பொதுமக்களின் இடர் நீங்கவும் சேவை விரிவாகவும் பிரதேச சபைகள் தோறும் சேவை செய்துவரும் பொது நிறுவனங்களுடன் இணைந்து தொழிற்படுமாறு கோரப்பட்டுள்ளது. 154

## அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வு சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் இடம் பெயர்ந்து கொழும்புத்துறையில் தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு 150ற்கும் மேற்பட்ட சாப்பாட்டுப் பாசல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. 154

# கல்முனை கடற்கரையில் உருக்குலைந்த சடலம்

(குருநகர்)

கல்முனைக் கடற் பகுதியில் சின்னவேலி என்னுமிடத்தில் கரையோர மணலில் புதையுண்டு உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று இருப்பதாக அங்கு மீன் பிடிக்கச் சென்று திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.

இச்சடலம் மீட்டுக்கொண்டு வர முடியாத நிலையில் இருப்பதால் சடலத்திலிருந்த பச்சை நிறத்தில் சின்னக் கட்டம் போட்ட சாறம் மீனவர்களால் எடுத்து வரப்பட்டுள்ளது. -95-ரி-சி

# இராசி பலன்

**16-07-1995**

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஆனி—32)

சதுர்த்தசி: முற்பகல் 10-05 வரை, சதயம்: பிற்பகல் 3-09 வரை, சித்தயோகம், இராகு காலம்: மாலை 4·30 முதல 6-00 வரை, சுபவேளை: காலை 9-00 முதல் 10-30 வரை.

மேடம்: விருந்தினர் மகிழ்ச்சி அதிகார மேன்மை, பயணம்.

இடபம்: புத்திரர் உதவி, தொழில் பலிதம், பண வரவு

மிதுனம்: காரியத் தடை, உறவினர் வெறுப்பு, அலைச்சல்.

கடகம்: மன விரக்தி, பெரியோர் பகை, குழப்பம்.

சிங்கம்: மாமனார் உறவு, வாக்கு வன்மை, திருப்தி,

கன்னி: கலந்து பேசுதல், வருவாய் உயர்வு, மனநிறைவு

துலாம்: உபத்திரவம், அறிவே துணை, பணமுடை.

விருச்சிகம்: வேண்டாத வேலைப்பளு, அவசர புத்தி.

தனுசு: நண்பர் சகவாசம், குடும்பச் சிறப்பு, பாராட்டு

மகரம்: குடும்பப் பகைமை ஏமாற்றப்படல், அமைதி இன்மை.

கும்பம்: திட்டமிடல், இனசன நன்மை, முயற்சி வெற்றி

மீனம்: எதிர்பாராத துன்பம், கோப வார்த்தை, கெட்ட கனவு.

— ஜோஸ்யர்

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தாதியர் பயிற்சிப் பாடசாலையில் மருத்துவ மாதர்களுக்குரிய பயிற்சி தாதியர்களுக்குரிய இறுதிப் பரீட்சைகள் 26ம் திகதி புதன் கிழமை நடைபெறும் என யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார், சி

## குண்டுவீச்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை வெளியிட்டுள்ளார்.

விடுதலை புலிகளிலிருந்து இலங்கை அரசு பெரும் சவாலை எதிர்நோக்குவதாகவும் இன்றைய நிலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனவும் கூறிய அவர் தேவாலயத்தில் நடைபெற்ற குண்டு வீச்சுப் படுகொலையை கண்டிக்க மறுத்துவிட்டார். இலங்கை அரசு இச்சம்பவம் பற்றி ஆராய்ந்து வருவது பற்றி அமெரிக்காவுக்குத் தெரியும் எனவும் கூறினார் சி


# கண்ணீர் அஞ்சலி

## திரு. சந்தியாப்பிள்ளை வசந்தகுமார்

[ மினி வெதுப்பக உரிமையாளர் ]

உயரப்புலம், ஆனைக்கோட்டை.

அகாலமரணமடைந்த

யாழ். மாவட்ட வெதுப்பாக உரிமையாளர் சங்கத்தின் சங்கானை / சண்டிலிப்பாய் கிளையைச் சேர்ந்த மினி வெதுப்பக உரிமையாளர் உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு. சந்தியாப்பிள்ளை வசந்தகுமார் அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ். மாவட்ட

வெதுப்பக உரிமையாளர் சங்கம்,

183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(ஏ-5108)

# இராணுவத்திடமிருந்து தப்பியவர் ஷெல் வீச்சால் பலியானார்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப்பகுதியில் விடுதலைப்புலிகளால் துரத்தியடிக்கப்பட்ட இராணுவத்தினரின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட பெண் ஒருவர் படையினரின் கொடூர ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி ஸ்தலத்திலே பலியானார்.

நேற்றுமுன்தினம் அளவெட்டியிலிருந்து இராணுவத்தினரை விரட்டியடித்த விடுதலைப்புலிகள் அங்கிருந்து 150க்கும் மேற்பட்ட பொதுமக்களை மீட்டனர். புலிகளால் அளவெட்டி பிள்ளையார் ஆலயத்திலிருந்து மீட்கப்பட்டு விடுவிக்கப்பட்ட சமயம் இராணுவம் மேற்கொண்ட மிகக்கடும் ஷெல் தாக்குதலுக்கிலக்காகி அளவெட்டியைச் சேர்ந்த சி. அன்னலெட்சுமி என்ற பெண் ஸ்தலத்திலே பலியானார்.

இவரது சடலம் மீட்கமுடியாத நிலையில் ஏனையவர்கள் தப்பிவந்துள்ளனர். இவரின் சகோதரரான அளவெட்டியைச் சேர்ந்த சின்னையா தனபாலசிங்கம் (42 வயது), உ. நாகராசா (58 வயது) ஆகியோர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 170-90-சி

# அளவெட்டியில் ஒருவர் ஷெல்லுக்கு பலி

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவத்தினரின் ஷெல்லுக்கு இலக்காகி அளவெட்டி பகுதியில் நேற்றும் ஒருவர் பலியானதோடு நால்வர் படுகாயமடைந்தனர்.

அளவெட்டி பகுதிக்கு வீட்டுப் பொருட்களை எடுக்கச் சென்றவேளை ஷெல் வீச்சினால் மல்லாகத்தைச் சேர்ந்த இரத்தினம் இராஜேந்திரம் (26 வயது) என்பவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இதைவிட கே. ரஞ்சன் (வயது 23) கந்தரோடை, ஆர். றதீசன் (வயது 24) அளவெட்டி, எஸ். தனபாலசிங்கம் (வயது 52) அளவெட்டி, த. சிவபாக்கியம் (52 வயது) ஆகியோர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 170-90-சி

# அரசுக்கு எதிரான போராட்டத்தை ஐ. தே. க. ஒத்திவைத்துள்ளது

(கொழும்பு)

அரசுக்கு எதிராக நேற்று தென்பகுதியில் நடாத்த உத்தேசிக்கப்பட்டிருந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக்கட்சி ஒத்திவைத்துள்ளது.

இத்தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையில், வடக்கை கைப்பற்றும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ள இவ்வேளையில் அரசுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பது உசிதமானதல்ல என தாம் கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை நீக்குவதற்கு அரசு விதித்த காலக்கெடு நேற்றுடன் முடிவடைவதை முன்னிட்டே நேற்றைய தினம் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்க ஐ. தே. க. முன்னர் தீர்மானித்திருந்தது. -வி-சி

# இராணுவ நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்?

(கொழும்பு)

வலிமேற்கு, வடக்குப் பகுதியில் படையினர் மீண்டும் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில தெரிவித்தார்:

படையினர் கைப்பற்றியுள்ள பகுதிகளில் தற்போது தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் படையினர் நேற்று மீண்டும் தமது நடவடிக்கையை ஆரம்பித்ததாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட 'ஒப்பரேஷன் லீப் போவேட்'டில் படையினர் பெரும் இழப்புக்களை சந்தித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. சி

# யாழ். ஆஸ்பத்திரி குறைபாடுகள் பற்றி சுகாதார அமைச்சுக்கு தகவல்

(யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தற்போது நிலவும் பல குறைபாடுகளை விரிவாக, சுகாதார அமைச்சுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வைத்தியசாலைப் பணிப்பாளர் நேற்று அறிவித்துள்ளார்,

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் அலுவலகம் ஊடாக பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணத்தின் செய்தி நேற்றுக் காலை கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அச்செய்தியில்:

* தற்போது வைத்தியசாலையில் எரிபொருளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட சத்திர சிகிச்சையை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

* இரண்டாம் காலாண்டு மருந்துவகைகள் முழுமையாக வந்துசேராததினால் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

* வலிகாமம்- வடக்கு, மேற்கு பகுதியில் இராணுவ நடவடிக்கையின்போது பெருமளவான பொதுமக்கள் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரி நிரம்பி வழிகின்றது.

* வலிகாமத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது அப்பகுதியிலுள்ள எமது வைத்தியசாலை ஊழியர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி தெரியவில்லை. இவ்வூழியர்கள் வைத்தியசாலைக்கு வராதமையால் ஊழியர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

* தற்போது அதிதீவிர சத்திர சிகிச்சையை மேற்கொள்ளுவதற்கு சத்திர சிகிச்சை நிபுணராக டாக்டர் ஒருவரே கடமையாற்றி வருகின்றார்.

* வைத்தியசாலையின் தேவைக்கான பணத்திற்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 170-சி

## ஒப்பரேஷன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில் முறியடித்து படையினரைப் பின்வாங்கச் செய்துள்ளது.

மேற்படி இடங்களிலிருந்து நேற்று மாலை படையினர் மூட்டை முடிச்சுக்களுடன் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். -சி

## மாகோ வருகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்துவடபகுதி நோக்கிபுறப்பட்ட 'மாகோ' கப்பல் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் மண்ணெண்ணை பரல்கள், சவர்க்காரம் உட்பட அத்தியாவசிய பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன

இக்கப்பலில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கான ஜூன் மாத கோட்டா மருந்துகளும் எடுத்து வரப்படுகிறது. -170-சி

## படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் அப்புறப்படுத்தும் முயற்சியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆகவே இன்னும் ஓரிரு தினங்களுக்குள் இவை அனைத்தும் அப்புறப்படுத்தியவுடன், விடுதலைப்புலிகள் பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வரை இப்பகுதிக்குள் பிரவேசிக்கவேண்டாமென்றும் கேட்டுக்கொள்கின்றார்கள். வி-சி

## புலிகளை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தற்பொழுது இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையில் விடுதலைப் புலிகளை அரசாங்கம் தோற்கடிப்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்று பிரிகேடியர் சரத்முனசிங்க பி.பி.சி. சிங்கள சேவைக்கு தெரிவித்த கருத்திற்கே பி.பி.சி. மேற்கண்டவாறு குறிப்பிட்டது.

## யாழ் குடாத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தமிழர் மீதான போர் நிறுத்தப்படவேண்டும், தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும், என்பதே எமது கோரிக்கை என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மீது தற்போது நடத்தப்படும் தாக்குதலின் பின்னணியில் இந்திய அரசு செயற்படுவதை நாம் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டப்பேரணியில் சுட்டிக் காட்டினோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைத் தமிழர்களைக் காட்டிக்கொடுத்தது இந்திய பிரதமர் நரசிம்மராவின் ஆட்சியே என்று திரு. வை. கோபாலசாமி தெரிவித்ததாக பி. ரி. ஐ. செய்தி தெரிவித்தது.

தமிழீழம் மட்டும் இலங்கையின் இனவாதப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும். இதனைப் புரிந்துகொள்ளாதவர்கள் இந்தியாவிலுள்ள தமிழ் மக்களிடையே பிரிவினை வாதத்தை தூண்டுவதாக எங்களை பழி சுமத்துகிறார்கள் என்றும் கூறினார்.

சென்னையில் நேற்று முன்தினம் திரு. வை. கோபாலசாமி தலைமையில் ம. தி. மு. க. வைச் சேர்ந்த இருபத்தையாயிரத்துக்கும் அதிகமானோர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டுள்ள முன்னேறிப் பாய்தல் ராணுவ நடவடிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியது குறிப்பிடத்தக்கது. -ரி-சி

## மேலதிக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினருக்கு ஏற்பட்ட பேரிழப்பே மேலதிக படை இங்கு அனுப்பப்படுவதற்கு காரணமெனக் கூறப்படுகிறது.

ஏற்கனவே குடாநாட்டில் 15,000ற்கும் மேற்பட்ட படையினர் குவிக்கப்பட்டு ஒப்பரேஷன் லீப் போவேட்டில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருவதும் தெரிந்ததே. -சி

# 48 மாவீரர்களுக்கும் பொதுமக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி சண்டிலிப்பாய் பகுதிகளில் இருந்து இராணுவத்தினரை விரட்டியடித்து வீரசாதனை புரிந்த மாவீரர்களுக்கு நேற்று யாழ் குடாநாடு எங்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். குடாநாடு முழுவதும் வீதிகள், சந்திகள் எங்கும் சிவப்பு, மஞ்சள்நிற கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு வாழைகளும் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. ஒலிபெருக்கி மூலம் சோக கீதங்களும் இசைக்கப்பட்டன.

மாவீரர்களின் புகழுடல்கள் வைக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று பெருமளவு பொதுமக்கள் தங்கள் அஞ்சலியை செலுத்தினர்.

170-59 90-சி

## உலக

(1ம் பக்கத் தொடர்சி)

கொண்ட மக்கள் கோஷங்களை எழுப்பினார்கள்.

சிறிலங்கா அரசின் தமிழர் மீதான படுகொலையையும், மக்களை விமானக் குண்டுவீச்சின்மூலம் அழிப்பதையும் கண்டிக்குமாறு சுவீடன், நோர்வே, அவுஸ்திரேலியா அரசுகளிடம் பேரணிகளில் கலந்துகொண்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஏற்கனவே பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் சிறிலங்கா அரசின் இந்தப் படுகொலை நடவடிக்கைகளைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. -ரி-சி

# பலாலி முகாமிலிருந்து அகோர ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வலிவடக்கு பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று நண்பகல் வரை இராணுவத்தினர் வலிவடக்கு பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

அளவெட்டி, மல்லாகம், சுன்னாகம், உடுவில் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. இந்த ஷெல்லினால் பொதுமக்களின் குடிமனைகள் பல சேதமடைந்துள்ளன.

170-சி

## பிரிட்டிஷ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும், ஷெல் தாக்குதல்களையும் உடன் நிறுத்துமாறும். இந்த ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள், குழந்தைகள் பல்கலைக்கழக மாணவர்கள், சட்ட வல்லுநர்கள், பாடசாலை அதிபர்கள், தொழில் நிறுவனங்களின் அதிபர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் 65 தமிழ் அமைப்புகள், பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயரிடம் மகஜர்களையும் தனித்தனியாகக் கையளித்தார்கள். -வி-சி

# கூ. சங்கம் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கு அத்தியாவசிய சேவையை வழங்கும் பொருட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் திறந்திருக்கும். 170-சி

# ஆசிரியர்கள் மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறைக் கல்விக்கோட்ட பாடசாலைகளில் க. பொ. த. (உயர்தர) சாதாரணதர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களும், பாடசாலைகளின் ஆசிரியர்களும் தத்தமது பாடசாலை அதிபர்களை இன்று மு. ப. 9மணிக்கு முன்பாகச் சந்தித்து அதிபரின் அறிவுறுத்தலுடன் யாழ் கல்வித் திணைக்களம் வலயம் 1க்கு தவறாது வருகை தரும் வண்ணம் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

(சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.